பக்கங்கள் 19

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஐப்பசி 19 திங்கட்கிழமை 06.11.2023 அதிர்வு 98

## மீனவரை விடுவிக்கக் கோரி தமிழகத்தில் உண்ணாவிரதம்

- ந.லோகதயாளன் -

இலங்கையில் கைது செய்யப்பட்டு சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள 64 தமிழக மீனவர்களை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தியும், கடந்த 6 ஆண்டுகளாக மீட்கப்படாமல் இலங்கையில் 04

# யாழில் சீனாவின் உதவித் திட்டம் ஆரம்பம்

(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன், பிரபாகரன் டிலக்சன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு இன்று விஜயம் மேற்கொண்ட சீனத் தூதுவர் கி ஸென் ஹொங், யாழ். மாவட்டத்தில் உள்ள பல்வேறு இடங்களைப் பார்வையிட்டதுடன் பொருளாதாரத்தில் நலிவுற்ற குடும்பங்களுக்கான நிவாரணப் பொருட்களையும் வழங்கிவைத்தார். 04



# சீன முதலீடுகளுக்கு வடக்கில் வரவேற்பு என்கிறார் தூதுவர்!

## அங்கிருந்து இறக்குமதியாகும் கடலுணவு

## வடக்கு மாகாணத்துக்கு வரவே மாட்டாதாம்

(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன், பிரபாகரன் டிலக்சன்)

சீனத் தொழிற்துறை முதலீட்டாளர்கள் இலங்கையின் வடக்கில் முதலிட மிக ஆர்வமாக உள்ளனர் என்று இலங்கைக்கான சீனத் தூதுவர் கி ஸென் ஹொங் தெரிவித்தார். அதனை வடக்கு மக்களும் வரவேற்கத் தயாராகவுள்ளனர் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார். 04



# சிங்களக் குடும்பஸ்தர் யாழில் சடலமாக மீட்பு



- எஸ்.நிதர்ஷன் -

யாழ்ப்பாணம் வைத்தியசாலை வீதியில் கொட்டடிப் பகுதியில் உள்ள தனியார் விடுதியில் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

லால் பெரேரா என்ற 61 வயதுடைய தென்னிலங்கையைச் சேர்ந்த சிங்கள 04

# யாழ். பழைய கச்சேரியை பார்வையிட்ட சீனத் தூதர்

(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன், பிரபாகரன் டிலக்சன்)

யாழ்ப்பாணத்துக்கு இன்று விஜயம் மேற்கொண்ட சீனத் தூதுவர் தலைமையிலான குழுவினர், யாழ். பழைய கச்சேரியைப் பார்வையிட்டனர்.

யாழ். பழைய கச்சேரியை சீன நாட்டுத் நிறுவனத்துக்கு 04



# திருமலையில் பலத்த எதிர்ப்புக்கு மத்தியிலும் இரு புத்தர் சிலைகள்

## இலுப்பைக்குளம் பகுதியில் பரபரப்பு

(அப்துல்சலாம் யாசீம், எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை – இலுப்பைக் குளம் பகுதியில் தமிழர்களுடைய பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் இன்று புத்தர் சிலைகள் வைக்கப்பட்டுள்ளன.

திருகோணமலை – நிலாவெளி பிரதான வீதியின் இலுப்பைக்குளம் பகுதியில் தமிழ் மக்களின் எதிர்ப்புக்கு மத்தியில் நிர்மாணிக்கப்பட்டு வந்த 04



# யாழில் சீன அரசின் உதவித் திட்டம் ஆரம்பம்













(படங்கள்:- ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன், பிரபாகரன் டிலக்சன்)



# டிப்பரில் மண்ணைக் கடத்தியோர் பொலிஸாரை கண்டு தப்பி ஓட்டம்!

**வீதியில் கொட்டப்பட்டது மண்;
தொலைத் தொடர்பு கம்பம் முறிந்து வீழ்ந்தது!**

டிப்பரில் மண்ணைக் கடத்தியவர்கள் பொலிஸாரைக் கண்டதும் வீதியில் மண்ணைப் பறித்தவாறு தப்பி ஓடியுள்ளனர். இதன்போது வீதியருகே நிண்ட மின் கம்பத்துடன் மோதியதில் மின் கம்பம் முறிந்து வீதியின் குறுக்கே வீழ்ந்தது.

யாழ்ப்பாணம் – பருத்தித்துறை வீதியின் சிறுப்பிட்டி பகுதியில் இன்று அதிகாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் டிப்பரில் மணல் கடத்தப்பட்ட போது பொலிஸார் வாகனத்தை மறித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பாக அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

கொட்டப்பட்ட மணலை வீதியில் இருந்து அகற்றி ஒரு சிலர் வீடுகளுக்குக் கொண்டு சென்றனர்.





# 'கெப்' வாகனமும் ஓட்டோவும் விபத்து; கணவனும் மனைவியும் படுகாயம்!

**'கெப்' வாகனச் சாரதி பொலிஸாரால் கைது!!**

**(அப்துல்சலாம் யாசீம்)**

திருகோணமலை – மட்டக்களப்பு பிரதான வீதி கிளிவெட்டி 58 ஆம் கட்டை பகுதியில் 'கெப்' வாகனமும், ஓட்டோவும் மோதி விபத்துக்குள்ளானதில் ஓட்டோவில் பயணித்த கணவர், மனைவி இருவரும் படுகாயம் அடைந்த நிலையில் திரு கோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட் டுள்ளனர்.

இந்தச் சம்பவம் இன்று (06) காலை இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் ஓட்டோவில் பயணித்த தெஹிவத்த-மந்தனபுர பகுதியைச் சேர்ந்த டபிள்யு. எம்.சேனகபண்டார (39வயது) மற்றும் அவரது மனைவி எச்.எம்.நிலந்தி (34வயது) ஆகியோர் படுகாயம் அடைந்துள்ளனர்.

மட்டக்களப்பில் இருந்து திருகோணமலை நோக்கி வந்த கெப் வாகனமே மோதியுள்ளது.

விபத்துடன் தொடர்புடைய 'கெப்' வானத்தின் சாரதியைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். விபத்து தொடர்பிலான விசா ரணைகளை மூதூர் பொலிஸார் முன்னெடுத்து வரு கின்றனர்.



# பெண்கள், சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் வடக்கில் அதிகரிப்பு!

**மனித உரிமை செயற்பாட்டாளரான அம்பிகா சற்குணநாதன் தெரிவிப்பு**

வடக்கில் பெண்கள் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்துச் செல்கின்றன என்று மனித உரிமை செயற்பாட்டாளரான அம்பிகா சற்குண நாதன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி யில் நேற்று (05) விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட, பாதிக்கப்பட்ட பெண்கள் சிறுவர்களுக்கான சட்ட விழிப்புணர்வு வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித் துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற் றும் போது தெரிவித்துள்ளவை வரு மாறு–

சமூக மட்டத்தில் பல்வேறுபட்ட அமைப்புகள் வேலை செய்கின்றன. அவை பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றன என்று குறிப்பிடுகின்றன.

இதற்குக் காரணம் நாட்டில் இருக்கும் சட்டங்களைக் கூட சரியாக நடைமுறைப் படுத்தாமையே. 2005 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட சட்டம் குடும்ப வன் முறைக்கு எதிராக பாதுகாப்பதற்கான சட்டம் இதனூடாக கூட பெண்களுக்கு பாதுகாப்பு வழங்கப்படுவதில்லை. அதில் பெண்கள் பாதுகாப்பு தொடர்பில் பல சட்ட ஏற்பாடுகள் இருக்கின்றன. அதைக் கூட செய்வதில்லை.– என்றார்.

இதில் கரைச்சி, கண்டாவளை, பூநகரி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த பெண்கள் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், சட்டவாளர்கள் கலந்து கொண்டனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## திருமலையில்...

பொரலுகந்த ரஜமஹா விகாரைப் பகுதியில் இன்று காலை பௌத்த பிக்குகள் மற்றும் சிங்கள மக்களால் இரண்டு புத்தர் சிலைகள் வைக்கப்பட்டுள்ளன.

அந்தப் பகுதியில் ஆரம்பத்தில் புத்த விகாரை கட்டுவதற்கான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டுவந்த நிலையில் அதற்கு அப்பகுதி மக்களால் எதிர்ப்பு வெளியிடப்பட்டிருந்தது.

அத்துடன் அந்த விடயம் தொடர்பாக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானிடம் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் மற்றும் பொதுமக்கள் முறையிட்டதையடுத்து கடந்த ஓகஸ்ட் மாதம் ஆளுநரால் குறித்த கட்டுமானங்களுக்குத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

எனினும், தடை உத்தரவையும் மீறி குறித்த பகுதியில் கட்டுமானப் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில் அதற்கு எதிராக பொது மக்கள் 03.09.2023 அன்று ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

அதன் பின்னர் 09.09.2023 அன்று அந்தப் பகுதியில் பொரலுகந்த ரஜமஹா விகாரை எனும் பெயர் பொறிக்கப்பட்ட பெயர்ப்பலகை நடப்பட்டு தமிழ் மக்களின் எதிர்ப்புக்கு மத்தியிலும் எவ்வித அனுமதி இல்லாத நிலையிலும் கட்டுமானப் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வந்தன. இந்தநிலையில் இன்று காலை அந்தப் பகுதியில் இரண்டு புத்தர் சிலைகள் வைக்கப்பட்டுள்ளன.

பௌத்த மக்களே இல்லாத, தமிழ் மக்கள் காலாகாலமாக வாழ்ந்து வருகின்ற இப்பகுதியில் இன முறுகலை ஏற்படுத்தும் விதமாகவும், இன விகிதாசாரத்தை மாற்றியமைக்கும் முகமாகவும் சிலர் திட்டமிட்டு செயற்பட்டு வருகின்றனர் எனவும், புத்த விகாரையின் கட்டுமானங்களைத் தொடர்ந்து இப்பகுதிகளைச் சூழ சிங்கள மக்களை குடியேற்றும் திட்டம் உள்ளது எனவும் மக்கள் கவலை வெளியிடுகின்றனர்.

## மீனவரை விடுவிக்க...

உள்ள 133 விசைப்படகுகள் மற்றும் நாட்டுப் படகுகளை உடனடியாக விடுவிக்கக் கோரியும் இராமேஸ்வரம் அனைத்து விசைப்படகு மீனவர் சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் பாதிக்கப்பட்ட மீனவர்கள் மற்றும் சிறையில் உள்ள மீனவர்களின் உறவினர்கள் தங்கச்சிமடத்தில் உண்ணாவிரதப் போராட்டத்தை இன்று தொடங்கி நடத்தி வருகின்றனர்.

தங்கச்சிமடம் – யாகப்பா பஸ் நிலையத்தில் முன்னெடுக்கப்படும் இந்த உண்ணாவிரதப் போராட்டம் நாளை மாலை 5 மணி வரை தொடரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக தமிழக மீனவர்கள் மீதான கைது நடவடிக்கையைக் கண்டித்தும், மீனவர்கள் கைது நடவடிக்கையைத் தடுக்கத் தவறிய மத்திய, மாநில அரசுகளுக்கு எதிராகவும் கோஷங்கள் எழுப்பப்பட்டன.

இந்த உண்ணாவிரதப் போராட்டம் காரணமாக மீனவர்கள் இன்றும் நாளையும் மீன் பிடிக்கக் கடலுக்குச் செல்ல மாட்டார்கள் என்று இராமேஸ்வரம் அனைத்து விசைப்படகு மீனவர் சங்கத் தலைவர் ஜேசுராயா தெரிவித்தார்.

## யாழில் சீனாவின்...

வடக்கு மாகாணத்துக்கு மூன்று நாள் பயணமாக இலங்கைக்கான சீனத் தூதுவர் தலைமையிலான குழுவினர் வருகை தந்துள்ளனர். வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டச் செயலகங்களில் சீனாவின் பௌத்த சங்கத்தின் தொண்டு திட்டத்தின் ஊடாக பௌத்த விகாரைகள் மற்றும் சீனாவின் பௌத்த மக்களால் இலங்கையில் உள்ள ஏழை மக்களுக்கு உலர் உணவுப் பொதி வழங்கும் நிகழ்வு நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாகச் சீன தூதுவர் அடங்கிய குழுவினர் இன்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தனர்.

இன்று முற்பகல் 9 மணியளவில் யாழ்ப்பாணம் ஆயர் இல்லத்துக்குச் சென்ற சீனத் தூதுவர் தலைமையிலான குழுவினரால் ஒரு தொகுதி மக்களுக்கான நிவாரணப் பொதிகள் வழங்கிவைக்கப்பட்டன.

அதன் பின்னர் முற்பகல் 10 மணியளவில் சீன அரசால் 5 ஆயிரம் பேருக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கும் திட்டத்தின் ஆரம்பகட்டமாக யாழ்ப்பாணம் – நெடுந்தீவு மக்களுக்கு 500 பொதிகள் இதன்போது வழங்கி வைக்கப்பட்டன.

இதேபோன்று யாழ். மாவட்டத்தின் பல இடங்களிலும் அடுத்த கட்டங்களாக உலர் உணவுப்பொதிகளைத் தூதுவரே நேரடியாக வழங்கி வைக்கவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது

இந்த நிகழ்வில் சீன நாட்டுத் தூதரக அதிகாரிகள், யாழ். மாவட்ட அரச அதிபர் அ.சிவபாலசுந்தரன், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

**(படங்கள் 2ஆம் பக்கத்தில்)**

## சிங்களக் குடும்பஸ்தர்...

மொழி பேசுபவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அந்த நபர் மூன்று நாட்களாக விடுதியில் தங்கி இருந்த நிலையில் அறைக்கு வெளியே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

விடுதி உரிமையாளரால் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## யாழ். பழைய...

விற்பனை செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது எனக் கடந்த காலங்களில் குற்றச்சாட்டு எழுந்த நிலையில் சீனத் தூதுவர் பழைய கச்சேரியைப் பார்வையிட்டமை பாரிய சந்தேகங்களைக் கிளப்பியுள்ளது.

## சீன முதலீடுகளுக்கு...

“சீனாவில் இருந்து இலங்கைக்குக் கடலுணவு இறக்குமதி செய்யப்படாது. விசேடமாக வடக்கு மாகாணத்துக்குக் கடலுணவு இறக்குமதி செய்யப்படாது” – என்றும் அவர் குறிப்பிட்டார்.

சீனத் தூதுவர் தலைமையிலான குழுவினர் இன்று யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு விஜயம் செய்து நெடுந்தீவு பிரதேச மக்களுக்காக 500 உலருணவுப் பொதிகளை யாழ். மாவட்ட செயலகத்தில் வைத்துக் கையளித்தனர்.

இந்நிகழ்வில் கருத்துத் தெரிவித்த போதே இலங்கைக்கான சீனத் தூதுவர் கி ஸென் ஹொங் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் நான் வடக்கு மாகாணத்துக்கு வந்துள்ளேன். சீன பௌத்த மக்களின் 50 ஆயிரம் உணவுப் பொதிகளை வடக்கு மாகாண மக்களுக்கு வழங்க வந்துள்ளேன்.

கடந்த முறை வடக்கில் நீர் சுத்திகரிப்பு இயந்திரங்களை ஒவ்வொரு மாவட்டத்துக்கும் வழங்கினோம். நாம் தற்போது வழங்கும் உணவுப் பொதி நெருக்கடி நிலையில் உதவியாக இருக்கும். உணவுப் பொதி 7 ஆயிரம் ரூபா பெறுமதியானது.

உங்களுக்கும் எங்களுக்கும் உள்ள உறவின் அடிப்படையில் உதவிகளை வழங்குவோம். கொரோனா காலத்தில் நீங்களும் சினோபார்ம் தடுப்பூசியைப் பெற்றிருப்பீர்கள்.

பொருளாதார நெருக்கடியின்போது இலங்கையின் பொருளாதாரத்தை உயர்த்த முதலாவதாக சீனாவே கைகொடுத்தது. சீன எதிர்காலத்திலும் கைகொடுக்கும்.

1 கோடி 50 இலட்சம் ரூபா பெறுமதியான உதவிகளை சீனா வழங்கவுள்ளது. 50 இலட்சம் ரூபா உணவுப் பொருட்களாகவும், 50 இலட்சம் ரூபா மீனவர்களுக்காகவும், 50 இலட்சம் ரூபா வீட்டுத் திட்டத்துக்காகவும் சீனா வழங்கவுள்ளது.

இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சீனா சென்றபோது இலங்கையின் கடலுணவை சீனாவுக்கு ஏற்றுமதி செய்ய ஒப்பந்தம் செய்யப்பட்டது. சீனாவில் இருந்து இலங்கைக்குக் கடலுணவு இறக்குமதி செய்யப்படாது. விசேடமாக வடக்கு மாகாணத்துக்குக் கடலுணவு இறக்குமதி செய்யப்படாது.

சீனா உலகின் இரண்டாவது மிகப் பெரிய பொருளாதார நாடு. மிகப் பெரிய சந்தை வாய்ப்பு உள்ளது. உங்களை அதற்கே வரவேற்கின்றோம்.

சீனத் தொழிற்துறையினர் முதலீட்டாளர்கள் வடக்கில் முதலிட ஆர்வமாக உள்ளனர். வடக்கு மக்களும் அதனை வரவேற்கத் தயாராகவுள்ளனர் என்று நம்புகின்றேன்.” – என்றார்.

# சமஷ்டிக் கோரிக்கையின் தோற்றம் பற்றிய கண்காட்சியும் வரலாற்றுத் தெளிவூட்டலும்!

## 8 ஆம் திகதி நல்லூர் சங்கிலியன் பூங்காவில்

இலங்கையில் வடக்கு – கிழக்கு தமிழரின் இணைப்பாட்சி (சமஷ்டி) கோரிக்கையின் தோற்றம் தொடர்பான கண்காட்சியும் வரலாற்றுத் தெளிவூட்டலும் நாளை மறுதினம் 08 ஆம் திகதி நல்லூர் சங்கிலியன் பூங்காவில் இடம்பெறவுள்ளது.

வடக்கு – கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஊடக சந்திப்பு இன்று யாழில் நடைபெற்றது.

இந்தக்குழுவின் ஒருங்கிணைப்பாளர் க.லவகுசராசா மற்றும் வடக்கு ஒருங்கிணைப்பாளர் ஆகியோர் 100 நாள் திட்ட பிரகடனம் மற்றும் கண்காட்சி தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

அந்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு–

இலங்கையில் வடக்கு – கிழக்கு தமிழரின் இணைப்பாட்சி (சமஷ்டி) கோரிக்கையின் தோற்றம் தொடர்பான கண்காட்சியும் வரலாற்றுத் தெளிவூட்டலும் என்னும் தலைப்பில் அந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

வடக்கு – கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் வடக்கு – கிழக்கு மக்களுக்கான கௌரவமான அரசியல் தீர்வு வேண்டிய முன்னெடுக்கப்பட்ட 100 நாள் செயல்முனைவின் இறுதி நாளான 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 8 ஆம் திகதி வடக்கு – கிழக்கு மக்களுக்கான அரசியல் தீர்வாக " ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்துக்கு மீளப் பெறமுடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வு" வேண்டும் எனும் மக்கள்பிரகடனம்வெளியிடப்பட்டிருந்தது.

அந்த வகையில் இப்பிரகடனம் வெளியிடப்பட்டு ஒரு ஆண்டு பூர்த்தி நாளான எதிர்வரும் 08 ஆம் திகதி புதன் கிழமை வடக்கு – கிழக்கு மக்கள் ஒன்றிணையும் " இலங்கையின் வடக்கு – கிழக்குத் தமிழரின் இணைப்பாட்சி (சமஷ்டி)கோரிக்கையின் தோற்றம்" எனும் கண்காட்சியும் வரலாற்றுத் தெளிவூட்டல் நிகழ்வும் இடம் பெறவுள்ளது.

வடக்கு – கிழக்கு வாழ் தமிழ் பொது மக்கள், சிவில் செயற்பாட்டாளர்கள், அரசியல் தலைவர்கள்,ஆய்வாளர்கள், கல்வி மான்கள், பாதிக்கப்பட்ட மக்கள், பல்கலைக் கழக மாணவர்கள், தொழில் சங்கப்பிரதிநிதிகள்,ஊடகவியலாளர்கள், பெண் மனித உரிமை பாதுகாவலர்கள் எனப் பலருக்கும் இதனைத் தெரியப் படுத்த விரும்புகின்றோம்.

எனவே இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வில் பங்கேற்கு மாறும் அனைவரையும் அழைத்து நிற்கின்றோம்.

இலங்கையில் உள்ள வடக்கு – கிழக்கு தழிழ் மக்கள் கடந்த 1505 ஆண்டு வந்தடைந்த போர்த்துக்கேயர் காலம் தொடங்கி ஒல்லாந்தர், இறுதியான காலனித்துவ ஆங்கிலேயர் ஆட்சிக் காலம் மற்றும் 1948 ஆம் ஆண்டுக்குப் பின்னரான இலங்கை சிங்கள பேரினவாத அரசின் இன்றுவரையான ஆட்சிக் காலம்வரை பல வகையான துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் உள்ளாக்கப்பட்டு அடக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டு வருகின்றோம்.

இந்த நிலையில் இவ்வாறான சிங்கள பேரினவாதத்தின் இனவாத அடக்கு முறைகளுக்கும் ஒடுக்குமுறைகளுக்கும் உள்ளான தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு வேண்டிய போராட்டங்கள் மற்றும் சந்திப்புக்களை மேற்கொண்டோம். குறிப்பாக அரசியில் தீர்வு தொடர்பான ஒப்பந்தங்களையும் பேச்சுகளையும் தமிழ்த் தலைவர்கள் காலனித்துவக் காலங்களிலும் அதற்கு பின்னராக இலங்கையில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த சிங்கள அரசின் தலைவர்களுடனும் மேற்கொண்டிருந்தனர்.

செல்வா பண்டா ஒப்பந்தம், செல்வா டட்லி ஒப்பந்தம், இலங்கை இந்திய ஒப்பந்தம், திம்பு பிரகடனம் மற்றும் ஒஸ்லோ பேச்சு என்பனவற்றை இங்கு குறிப்பிட முடியும்.

ஆனால் மேற்படி அரசியல் தீர்வு தொடர்பான பேச்சு மற்றும் ஒப்பந்தங்கள் அனைத்தும் சிங்கள தலைவர்களால் நிராகரிக்கப்பட்டு நாம் ஏமாற்றப்பட்ட வரலாறுகளே அதிகம்.

தமிழ் மக்கள் இலங்கையின் வடக்கு – கிழக்கு மாகாணங்களில் வரலாற்றுக்கு முந்தைய காலம் தொட்டு பாரம்பரியமாக தமக்கேயான தனித்துவமான அடையாளத்துடன் வாழ்ந்து வருகின்றனர்.

இந்தப் பிராந்தியத்தில் எண்ணிக்கைப் பெரும்பான்மையினரான தமிழ் மக்களுடன் எண்ணிக்கைச் சிறுபான்மையினரான தமிழ் பேசும் முஸ்லிம் மக்களும் வாழ்ந்து வருகின்றனர்.

ஆட்சிக்கு வந்த சிங்கள பெரும்பான்மை அரசுகள் தமிழ் மக்கள் மீது திட்டமிட்ட முறையில் மேற்கொண்டுவந்த இனவாத அடிப்படையிலான அரசியல், மொழி, பொருளாதார, சமூக ரீதியான அடக்கு முறைகள் மற்றும் வன்முறைகளின் காரணமாகவே வடக்கு – கிழக்கு வாழ் மக்களுக்கு ஒருங்கிணைந்த வடக்கு – கிழக்கு மாகாணத்துள் மாகாண முறைமையிலான தீர்வு வழங்கப்பட வேண்டும், தமிழ் மொழியும் அரச கரும மொழியாக அரசியலமைப்பின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என 13வது திருத்தச்சட்டத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டது.

எனினும், 2006 இல் ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாண அலகு பிரிக்கப்பட்டு வடக்கும் – கிழக்கும் தனித் தனி மாகாணங்களாக்கப்பட்டன.

1987இல் மேற்கொள்ளப்பட்ட இந்திய – இலங்கை உடன்படிக்கை மூலமான 13 ஆவது திருத்தச் சட்டம் உருவாக்கப்பட்டு இற்றுடன் 36 ஆண்டுகள் நிறைவடைந்து விட்டது.

இந்தக் கால இடைவெளியில் இலங்கை அரசால் தமிழ் மக்கள் இனப் படுகொலை செய்யப்பட்டதுடன் தமிழர்கள் மீது போர்க் குற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. தொடர் இடப்பெயர்வு மற்றும் பலவருடகால அகதி முகாம் வாழ்வை அனுபவித்தனர். போரால் இருப்பிடங்களும், சொத்துக்களும், வாழ்வாதாரங்களும் வளங்களும் அழிக்கப் பட்டன.

பயங்கரவாதத் தடைச்சட்டதின் மூலம் ஆயிரக் கணக்கான தமிழர்கள் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்கு உட்படுத் தப்பட்டனர். ஆயிரக் கணக்கானோர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். இராணுவமயமாக்கம், திட்டமிட்ட முறையிலான நில அபகரிப்பு, மனித உரிமை மீறல்கள் காரணமாக பாரிய அச்சுறுத்தலை இன்றுவரையில் தமிழ் மக்கள் எதிர்கொண்டு வருகின்றனர்.

இன அடக்கு முறைகளுக்கும், ஒடுக்கு முறைகளுக்கும் உள்ளாகி இருக்கும் எமது வடக்கு – கிழக்கு மக்கள் தனியான தேசியம், தாயகம் மற்றும் சுயநிர்ணய உரிமையுடனும் வாழக் கூடிய வகையிலான "ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு – கிழக்கு மாகாணத்துக்கு மீளப் பெற முடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வு" வேண்டும் எனும் அரசியல் தீர்வு கிடைக்கப் பெறும் பட்சத்திலேயே வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்கள் நின்மதியாகவும் சுயமாகவும் தமக்கான அடையாளத்ததுடன் வாழ முடியும்.

இந்நிலையில் நாங்கள் நாளை மறுதினம் 08 ஆம் திகதி யாழ்ப்பாணம் சங்கிலியன் பூங்காவில் எம்மால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள இலங்கையில் வடக்கு – கிழக்கு தமிழரின் இணைப்பாட்சி (சமஷ்டி) கோரிக்கையின் தோற்றம் தொடர்பான கண்காட்சியும் வரலாற்றுத் தெளிவூட்டலும் மேற்கொள்ள உள்ளோம்.– என்றுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பிழைப்பைக் கெடுக்கும் நினைப்பு

'நினைப்புதான் பிழைப்பைக் கெடுக்கும்' என்பார்கள். அரசியல்வாதிகள் விடயத்திலும் அதுவே குழப்பங்களுக்குப் பிரதான காரணம்.

அப்படி மிதப்பான நினைப்பு ஒன்றுடன் கருத்து வெளியிட்டிருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. கடந்த காலங்களை மறந்த அவரது தற்போதைய நினைப்பை எண்ணி அழுவதா, சிரிப்பதா என்று தெரியவில்லை.

"மக்களிடமிருந்து என்னை எவராலும் பிரிக்க முடியாது. இலங்கையில் குறுகிய காலத்தில் மக்கள் மனதை வென்ற ஜனாதிபதியாக நானே இருக்கிறேன்" என்ற அவரது நினைப்பு - தனக்குத்தானே புகழாரம் சூட்டும் மமதை - அவரை மீண்டும் எங்கேயோ கொண்டு போய் நிறுத்தப் போகின்றது போலும்.

இந்த நாட்டில் மாறி மாறி ஆட்சி பீடம் ஏறி வந்த பிரதான கட்சிகள் இரண்டில் ஒன்றின் - சுதந்திர இலங்கையில் முதல் அரசை அமைத்த மூத்த கட்சியின் - தலைவராக கால் நூற்றாண்டுகள் தாண்டியும் இருந்தும் கூட, நாட்டின் தலைவராக வர முடியாமல் அரசியல் குப்பை கூடைக்குள் கடைசியில் வீசப்பட்டவர் அவர்.

கடந்த பொதுத் தேர்தலில் அவரது கட்சிக்கு விழுந்த வாக்குகளின் அடிப்படையில் எந்த மாவட்டத்திலும் அவரது கட்சி வேட்பாளர்களின் விருப்பு வாக்குகள் கூட எண்ணப்படவில்லை. 43 ஆண்டுகள் அவர் தொடர்ந்து பிரதிநிதித்துவம் செய்த கொழும்பு மாவட்டத்தில் கூட அவரது கட்சிக்கு ஓர் இடம் கிடைக்கவில்லை. வரலாற்றில் தூக்கிக் கடாசப்பட்டு, புறமொதுக்கப்பட்ட கட்சியாக அனுங்கிக் கொண்டு கிடந்தது அவரது தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி. நாடு முழுவதிலும் கிடைத்த வாக்குகளின் எண்ணிக்கையின் அடிப்படையில், தட்டுத் தடுமாறித் தேசிய பட்டியலில் ஓர் ஆசனம் கிடைக்க, அதன் மூலம் பின் கதவால் நாடாளுமன்றுக்குள் நுழைந்தவர் அவர்.

'சரஸ்வதி சபதம்' சினிமாப் படத்தில் பட்டத்து யானை மாலையைத் தூக்கிப் போட்டமையால் வீதியோரப் பிச்சைக்காரி நாட்டின் ராணியாவாள். அதுபோல நாட்டை விட்டு ஓட வேண்டிய கட்டாயத்துக்குள் தள்ளப்பட்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கடைசி நேரத்தில் போட்ட பிரதமர் என்ற பிச்சைப் பதவியால், பின்னர் பின்கதவால் ஜனாதிபதி அதிகாரத்துக்கு வந்தவர் ரணில். ஏதோ தாம் வானத்திலிருந்து அப்பதவிக்குக் குதித்து வந்தவர் போல இப்போது சளாப்புகின்றார்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தல் வரை அவருக்கு நேரடியாக வாக்குகள் விழாவிட்டாலும் தமிழ் மக்கள் உட்பட சிறுபான்மையினரின் ஆதரவு அவருக்கு இருந்தது. ஆனால் இப்போது நிறைவேற்றதிகார ஜனாதிபதிப் பதவியை ஏற்றமையையடுத்து அவர் பண்ணிவரும் குதர்க்கத்தில் - குசும்புத்தனத்தில் - அந்த ஆதங்க ஆதரவு கூட இப்போது அவருக்கு அற்றுப் போய்விட்டது.

முன்னர் கூறியவற்றுக்கெல்லாம் மாறாக - முரண்பாடாக - முழுக் குழப்பமாக - இப்போது பேசுகின்றார்.

தமக்கு மக்கள் செல்வாக்கு இருக்கின்றது என்ற உண்மையான துணிச்சல் அவருக்கு இருக்குமானால், தாம் இடைநிறுத்தம் செய்த உள்ளூராட்சித் தேர்தலை நடத்தச் செய்து, அதன்மூலம் தமது ஆதரவை நிரூபிக்க வேண்டும் - வெறும் கையால் முழம் போடுவது மாதிரி இதுபோன்ற சவடால் பேச்சைத் தொடர்வதை விடுத்து.





## மருதமுனை மனாரியன் விசேட கலந்துரையாடல்

( ஏ.எல்.எம்.ஷினாஸ்)

மருதமுனை மனாரியன் – 90 நண்பர்கள் அமையத்தின், எதிர்கால அபிவிருத்தியை நோக்காக கொண்ட விசேட கலந்துரையாடல் அமைப்பின் தலைவர் எம்.ஐ.எம். வலீத் தலைமையில் மருதமுனை அல்–மனார் மத்திய கல்லூரி பெண்கள் மற்றும் ஆரம்பப் பிரிவு நூலக மண்டபத்தில் நேற்று முன்தினம் (4) இரவு நடைபெற்றது.

மனாரியன் –90 அமைப்பால் எதிர்காலத்தில் சமூக மட்டத்தில் முன்னெடுக்கப்படவுள்ள சமய, சமூக, கல்வி, பொருளாதார ரீதியான வேலை திட்டங்கள் தொடர்பில் இங்கு கலந்துரையாடப்பட்டது.

அல்–மனார் மத்திய கல்லூரியும் – மனாரியன் – 90 அமைப்பும் கொள்கை ரீதியான செயற்றிட்டத்தை உருவாக்கி கல்வித்துறைக்கு புதிய வேலைத் திட்டங்களை முன்னெடுப்பது தொடர்பிலும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

அதேபோன்று அமைப்பில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களின் குடும்ப நலன்புரி விடயங்களில் கடந்த காலங்களில் முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டங்கள், எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள வேலை திட்டங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டு தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

## டெங்கு மற்றும் பூச்சியியல்; விசேட பயிற்சி கருத்தரங்கு!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம். றிபாஸ் வழிகாட்டலில் கல்முனை பிராந்திய தொற்று நோய் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஏ.ஸி.எம்.பஸாலால் கல்முனை பிராந்தியத்தில் கடமையாற்றும் நுளம்பு கட்டுப்பாட்டு கள உதவியாளர்களுக்கு டெங்கு, பூச்சியியல் தொடர்பான பயிற்சி கருத்தரங்கு காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் நடத்தப்பட்டது.

நிகழ்வில் வளவாளர்களாக தொற்று நோய்த்தடுப்பு பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர்.எம்.ஏ.ஸி.எம்.பஸால் மற்றும் மேற்பார்வை பூச்சியியல் உத்தியோகத்தர் கே.ஏ. ஹமீட் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தஸ்லீமா பஸீர் , மாவட்ட பொது சுகாதாரப் பரிசோதகர் ஐ.எல்.எம்.லபீர், சுகாதார பூச்சியியல் உத்தியோகத்தர் எஸ்.ரீ.பிர்தௌஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2023

'ஒரு மரம் பட்டுப்போகுமாக இருந்தால் பட்ட அந்த மரத்துக்குப் பதிலாக அவ்விடத்தில் இன்னொரு மரத்தை நாட்டுங்கள்.'

கரோலஸ் இலினேயஸ்
(தாவர வகைப்பாட்டியலாளர்)

# பிரதமரைச் சந்தித்த சந்திரகுமார்!



வடக்கில் நிலவுகின்ற பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் பிரதமர் தினேஸ் குணவர்த்தனவுடன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளருமான மு. சந்திரகுமார் சந்தித்து கலந்துரையாடினார்.

இன்றைய தினம் (06) கொழும்பிலுள்ள அவரது அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இதன் போது வடக்கில் வனவள திணைக்களத்தால் கையகப்படுத்தப்படுத்தப்பட்டுள்ள பொது மக்களின் காணி மற்றும் விவசாய நிலங்கள், வடக்கில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் குடிதண்ணீர் விநியோக திட்டங்களின் போது ஏற்படும் தடைகள், உள்ளூராட்சி மன்றங்களுக்குச் சொந்தமான வீதிகளை விசேட நிதி ஒதுக்கீட்டின் கீழ் புனரமைக்க வேண்டிய தேவைகள், பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கீழ் நிலவும் வளப் பிரச்சினைகள் என்பன பிரதமரின் கவனத்துக்குக் செல்லப்பட்டுள்ளன.

விடயங்களை கேட்டறிந்துகொண்ட பிரதமர் சில விடயங்கள் தொடர்பில் உடனடியாகக் கவனம் செலுத்துவதாகவும், ஏனைய விடயங்களில் எதிர் காலத்தில் கவனம் எடுப்பதாகவும் தெரிவித்துள்ளார் என்று கூறப்பட்டது.

# இலங்கை தமிழரசுக் கட்சியின் பொத்துவில் நிர்வாகத் தெரிவு





( வி.ரி.சகாதேவராஜா)

இலங்கை தமிழரசுக் கட்சியின் பொத்துவில் தொகுதிக்கான நிர்வாகத் தெரிவு அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தா. கலையரசன் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இலங்கை தமிழரசுக்கட்சியின் பொத்துவில் தொகுதி தலைவராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கை தமிழரசுக்கட்சியின் ஆலையடி வேம்பு இணைத் தலைவருமான கவிந்திரன் கோடீஸ்வரன் தெரிவு செய்யப்பட்டார்.

இணைத் தலைவராக அம்பாறை மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பின் முக்கியஸ்தரும் காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும் காரைதீவு இலங்கை தமிழரசு கட்சியின் தலைவருமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தெரிவு செய்யப்பட்டார் .

திருக்கோவில் தமிழரசுக் கட்சியின் உப செயலாளரும் ஆசிரியருமான த.தயாபரன் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் காரைதீவு கிளை உப செயலாளர் சி.சிவகுமார் பொத்துவில் தொகுதியின் உப செயலாளராக தெரிவு செய்யப்பட்டார்.

பொத்துவில் பிரதேச சபை உறுப்பினரும் பொத்துவில் இலங்கை தமிழரசு கட்சியின் கிளைத் தலைவருமான சுபோகரன் பொருளாளராக தெரிவு செய்யப்பட்டார்.

சிரேஷ்ட உறுப்பினர்களாக சோ.பாக்கியராஜ், க.தருமராஜா, அ.கலா நேசன், தே.புனிதன், சி.இராஜகுமார், வே.கேதீஸ்வரன், இ.ஜெகநாதன், க.கோகுலன் , ஆ.தர்மதாச், க.செல்வபிரகாஷ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் பொத்துவில் தொகுதிக்கான 15 பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டனர்.







# சம்பளம் கொடுப்பதற்கு பணம் கிடையாது; வாக்குறுதிகளை மட்டுமே அரசு வழங்கும்!

## நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு

சம்பளம் கொடுப்பதற்கு அரசிடம் பணம் கிடையாது என்று நாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய குடியரசு முன்னணிக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பாடலி சம்பிக்க ரணவிக்க நேற்று ஞாயிற்றுக்கிழமை (05) சம்மாந்துறையில் 'கட்டியெழுப்புவோம்' எனும் தலைமைப்பில் பொது மக்களைச் சந்திக்கும் நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டார்.

இதன் போது இவ்வாறு தெரிவித்துள்ளார் அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு–

நமது நாட்டை இக்கட்டான நிலையில் இருந்து மீட்பதற்குச் சரியான தலைமை வேண்டும். கடந்த வருடம் எங்களுக்குப் பெற்றோல், உரம், மின்சாரம், கேஸ் என்று எதுமே இருக்கவில்லை. இதற்குப் பிரதான காரணம் எங்களிடம் டொலர் இல்லையென்று கூறப்பட்டது.

வங்கியில் நாங்கள் ஒரு கடனைப் பெற வேண்டுமென்றால் அதற்கான ஆவணங்களை வழங்க வேண்டும். வங்கியில் பெற்ற கடன் மூலமாக வியாபாரத்தைச் சரியாகச் செய்யாது விட்டால் கடனை மீளச் செலுத்துவது கடினமாக இருக்கும். அப்போது வங்கி நம்மை வங்குரோத்து அடைந்தவர் என்று கண்டு கொள்ளும்.

இந்த நிலையில் கடனுக்காக எமது சொத்தை வங்கியில் வைத்திருந்தால் அதனை வங்கி எடுத்துக் கொள்ளும்.

இது போலவே கடந்த காலங்களில் வெளிநாடுகளில் இருந்து கடன்களைப் பெற்று வீதிகள், விமான நிலையங்கள் போன்றவற்றை அமைத்தோம். அவற்றால் எமக்கு எந்த இலாபமுமில்லை. அதனால் கடனை அடைக்க முடியாது போனது. நாடு வங்குரோத்தடைந்தது.

எங்களுக்குக் கடனாக டொலர்களைத் தந்தவர்கள் வழக்குத் தொடர்ந்துள்ளார்கள். இந்த நிலையில் உலக வங்கி கடன்களைத் தந்தவர்களிடம், நீங்கள் அவசரப்பட வேண்டாம், கடனை தருவதற்கு உரிய ஏற்பாடுகளை நாங்கள் செய்கிறோம் என்று அரசு கூறியுள்ளது.

இப்போது அரசு மின்சாரத்தின் விலையையும், பால் மாவின் விலையையும், கேஸ், எரிபொருள்களின் விலையையும், ஏனைய பொருள்களின் விலைகளையும் அதிகரித்துள்ளது. இதைத்தான் அரசு செய்கின்றதே தவிர உற்பத்தியை மேற்கொள்வதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை.

ஒரு சில தொழில்களை வழங்கினாலும், கடந்த 03 வருடங்களாக இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்புக்கள் வழங்கவில்லை. தொழில் வழங்கினால் சம்பளம் கொடுப்பதற்கு அரசிடம் பணம் கிடையாது.

வைத்தியர்கள், பொறியிலாளர்கள், கல்விமான்கள் நாட்டை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கின்றார்கள். இதனால் எங்களால் சிறந்த சேவைகளை பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஆயினும், இங்கு வந்து வாக்குறுதிகளை தருவார்கள். அவற்றை நிறைவேற்றும் பணம் யாரிடமும் கிடையாது. இதிலிருந்து மீள வேண்டிய கட்டாயம் எங்களுக்கு ஏற்பட்டுள்ளது. அதனால் படித்தவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து 2025 முதல் 2028 ஆண்டு வரையான காலப் பகுதியில் இந்த நாட்டை பழைய நிலைக்கு கொண்டு வரலாமென்ற திட்டத்தை முன் வைத்துள்ளோம்.

இதற்கு முதல் எங்கள் கடனை அடைக்கும் பணம் இக்காலப் பகுதியில் எம்மிடமில்லை. அதனால் 2028 ஆம் ஆண்டை இலக்காகக் கொண்டு செயற்படுகிறோம். இந்த குறுகிய 03 வருட காலத்தில் எங்களின் பிரச்சினைகளை தீர்க்க வேண்டிய வழியை ஏற்படுத்த வேண்டியுள்ளது.

வைத்தியசாலைகளில் மருந்து வேண்டும். தாதிகள் இருக்க வேண்டும். வைத்தியர்கள் இருக்க வேண்டும். உபகரணங்கள் இருக்க வேண்டும். இதனை தீர்க்க வேண்டும். மாணவர்கள் காலையில் சாப்பிட்டு விட்டு செல்ல வேண்டும். பாடசாலைகளில் உபகரணங்கள் இருக்க வேண்டும்.இதனை விட உணவுப் பிரச்சினை உள்ளது.

பசளையில்லா காரணங்களினால் உணவு உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. முட்டை உற்பத்தியையும் அதிகரிக்க வேண்டும். அதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மின்சார உற்பத்தியும் பாதிக்கப்பட்டுள்ளது. நிலக்கரி மூலமாக மின்சார உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டியுள்ளது.

சூரிய சக்தி மின்சாரத்தை புத்தளம் முதல் முல்லைத்தீவு வரை மேற்கொள்ள முடியும். யாழ் பிரதேசத்தில் காற்றாடி மூலமாக மின்சார உற்பத்தியை மேற்கொள்ள முடியும். அதனால் புதிய முறையில் டொலரை தேட வேண்டியுள்ளது. அயல்நாடான தமிழ் நாடு கேரளா போன்ற பிரதேசங்கள் மிகவும் முன்னேற்றம் அடைவதற்கு காரணம் என்ன? கொரியா, மலேசியா, தாய்லாந்து போன்ற நாடுகள் மிகவும் வேகமாக முன்னேறுவதற்கு காரணம் என்ன?

அவர்கள் பொருள்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதை விடவும் டிஜிற்றல் சேவையை அனுப்புவதன் மூலமாகத்தான் முன்னேற்றமடைந்துள்ளனர். ஆதலால் டிஜிற்றல் மூலமாக அதிகம் சம்பாதிக்க முடியும்.

இந்த வேலைத் திட்டங்களை செய்வதற்கு ஒரு நிபந்தனை இருக்கின்றது. அதுதான் நாங்கள் எல்லோரும் ஒற்றுமைப்பட வேண்டும். கடந்த 40 வருடங்களில் தமிழ் இளைஞர்கள் நினைத்தார்கள். தமிழர்களுக்கு ஒரு நாட்டை உருவாக்கினால் அதன் மூலமாக வளமான நாட்டை உருவாக்க முடியுமென்று நினைத்தார்கள். அதன் மூலமாக அவர்கள் மட்டுமல்ல நாங்களும் பாதிக்கப்பட்டோம்.

ஜே.வி.பி. நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று புரட்சி செய்தார்கள். அவர்களும் அழிந்து போனார்கள்.

முஸ்லிம்களிடையே ஏற்பட்ட பிரச்சினைகள் காரணமாக அதிகமான உயிர்களை பலி கொடுக்க வேண்டிய நிலைக்கு வந்தோம். ஆதலால் நாம் ஒன்றுபட வேண்டும்.

பரம்பரையாக செய்யும் அரசியலை மாற்ற வேண்டும். தந்தைக்கு பின் மகன், தாய்க்கு பின் மகள் என்ற அரசியல் நிலைப்பாட்டை மாற்ற வேண்டும். திறமைக்கு முதலிடம் அளிக்கும் அரசியல் சூழலை உருவாக்க வேண்டும்.– என்றார்.



# ஆசியாவில் தங்கம் வென்ற தருஷி ஜனாதிபதி ரணிலைச் சந்தித்தார்!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் இலங்கைக்குத் தங்கப் பதக்கத்தை வென்று தந்த மாணவி தருஷி கருணாரத்ன, கண்டி ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி ரணில் விக்ரம சிங்கவை சந்தித்தார்.

இலங்கைக்கான புதிதாக நியமிக்கப்பட்டுள்ள தூதுவர்களுக்கு நற்சான் றிதழ்கள் வழங்கும் நிகழ்வு கண்டி ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற போது மாணவி தருஷி கருணாரத்னவும் வைபவரீதியாக அழைத்து வரப்பட்டார்.

தருஷி கருணாரத்னவின் பாடசாலையான ஏ. ரத்நாயக்க மத்திய கல்லூரி விளையாட்டுப் பாடசாலையில் தடகள போட்டிகளில் ஈடுபட்டுள்ள 76 மாணவர்களும் அவருடன் இந்த நிகழ்வில் இணைந்து கொள்ள அழைக்கப்பட்டனர்.

இதன்படி பாடசாலை மாணவர்கள், அதிபர், தருஷியின் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் உட்பட 06 ஆசிரியர்களும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இதன் போது மாணவியின் திறமையைப் பாராட்டிய ஜனாதிபதி வாழ்த்துத் தெரிவித்தார்.









# அட்டாளைச்சேனையில் இரத்ததான முகாம்!

(கே. எ. ஹமீட் )

அட்டாளைச்சேனை அக் – அந்நூர் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் நேற்று ஞாயிற்றுக்கிழமை பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.

பழைய மாணவர் சங்கத்தின் செயலாளர் நிசாத் ஏ காதர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் ஆதார வைத்தியசாலை அக்கரைப்பற்றின் வைத்திய அத்தியட்சகர் ரீ.எஸ்.ஆர். ரீ.ஆர். றஜாப், அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிமனையின் உதவிக் கல்விப் பணிப்பாளரும், பாடசலை கல்வி மேம்பாட்டு இணைப்பாளருமான ஏ.எம். நௌபர்டீன் ஆகியோருடன் பிரதம பரிசோதகர் எம்.எஸ்.அப்துல் மஜீத் (ஓய்வு) ஆகியோர் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டனர்.

விசேட விருந்தினர்களாக ஆதார வைத்தியசாலையின் அபிவிருத்திக் குழுவின் உறுப்பினரும், எம்.ஜே.எஸ். குழுமத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளருமான எம்.ஐ.எம்.ஜரீன், அட்டாளைச்சேனை தள ஆயுள்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் ஐ.எல்.அப்துல் ஹைஹ, அந்நூர் மகா வித்தியாலய பிரதி அதிபர் எம்.எச்.எம். றமீஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஆதார வைத்தியசாலை அக்கரைப்பற்று இரத்த வங்கிப் பிரிவின் வேண்டுகோளுக்கு அமைவாக இந்த இரத்ததான முகாம் ஏற்பாடு செய்யப்பட்டது.

இரத்ததான முகாம் நிகழ்வுக்கு அட்டாளைச்சேனை -08 சனசமூக நிலையம் அனுசரணை வழங்கியிருந்தது.



# தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தால் உலருணவுப் பொதிகள் விநியோகம்!

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் பொருளாதார ரீதியாக மிகவும் பின் தங்கியுள்ள குடும்பங்களுக்கு உலருண வுப் பொதிகளை வழங்கி வருகின் றது.

இதற்கு 'அற்றார் அழி பசி தீர்த்தல்' என்ற திட்டத்தைச் செயற்படுத்தி வருகிறது.

'பகிர்ந்துண்டு வாழ்வோம்' என்ற கருப்பொருளில் செயற்படுத்தப்பட்டுவரும் இத்திட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை (05) அரியாலையில் முன்னெடுக்கப்பட் டுள்ளது.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தலைமை யில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட 50 குடும்பங்களுக்கு அத்தி யாவசிய உலருணவுகள் அடங்கிய பொதிகள் வழங்கப்பட்டன.

பொருளாதாரரீதியான வருவாயைத் தேடித்தரவல்ல கறுவாச் செய்கையை ஊக்குவிக்கும்பொருட்டு அனைவருக்கும் கறுவா மரக்கன்றுகளும் வழங்கப்பட் டுள்ளன.



இதற்கான நிதி அனுசரணையை கனடாவில் உள்ள இலங்கை வர்த்தக சங்கத்தின் சார்பில் அதன் முன்னாள் தலைவர் ந.கேதீஸ்வரசிவம் அனுப்பி வைத்துள்ளார்.

கொரானாப் பேரிடர் காலத்தில் ஏற்பட்ட தொழில் இழப்பைத் தொடர்ந்து தற்போது நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி பொருளாதார ரீதி யாக ஏற்கனவே நலிவுற்ற குடும்பங்களை வெகுவாகப் பாதித்துள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டு தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் கொரானாப் பேரிடர் காலத்தில் ஆரம்பித்த 'அற்றார் அழி பசி தீர்த்தல்' திட்டத்தைக் கைவிடாது தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றது.

# கண்டி கலஹா சண்முகா மாணவி தேசிய மட்டப் பேச்சில் முதலிடம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

மத்திய மாகாணம், கண்டி மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய பிரதேசமான , கலஹா ஸ்ரீ சண்முகா ஆரம்ப வித்தியாலயத்தை சேர்ந்த மாணவி முரளிதரன் செஷினி பிரிவு 01 பேச்சுப் போட்டியில் அகில இலங்கை தமிழ் மொழி தினப் போட்டியில் ஒன்பது மாகாணங்களுடன் போட்டியிட்டு முதலாம் இடத்தை பெற்றுள்ளார்.

இந்த மாணவி பாடசாலைக்கும், கலஹா மண்ணுக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

பாடசாலை அதிபர் மற்றும் கல்விச் சமூகம், இந்த மாணவி, வகுப்பாசிரியர் எம்.ஐ.எப். இர்சாட் ஆகி யோருக்கு வாழ்த்துக்களையும்பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளனர்.





# சந்திரிகாவின் புலமைப் பரிசிலுக்கு இறக்காமம் மாணவர் இருவர் தெரிவு

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் சொந்த நிதியில் மாணவர்களின் கல்விக்கு உதவும் புலமைப் பரிசில் நிகழ்ச்சித் திட்டத்துக்கு அம்பாறை மாவட்டத்தில் இருந்து இரண்டு மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் இருவரும் இறக்காமம் அஷ்ரப் தேசிய பாடசாலை மாணவர்கள்.

இவர்கள் இருவரும் இறக்காமம் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் ஜே. கலீலூர் ரஹ்மானால் பரிந்துரைக்கப்பட்டிருந்தனர்.

தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான புலமைப் பரிசில் வழங்கிவைக்கும் நிகழ்வு முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா தலைமையில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

அம்பாறை மாவட்டத்தில் இருந்து இறக்காமம் அக்பர் பள்ளிவாசல் தலைவர் முபாறக்கின் புதல்வரும், முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் தௌபீக்கின் புதல்வியும் இந்தப் புலமை பரிசிலுக்கு தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

# சாவகச்சேரியில் பரிசளிப்பு விழா!






**(த.சுபேசன்)**

சாவகச்சேரி ரி.பி. ஹன்ற் ஞாபகார்த்த ஓவிய கூடத்தின் வடக்கு மாகாணம் தழுவிய கலைப் போட்டிகளுக்கான பரிசளிப்பு வைபவம் நேற்று (05) ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு ஓவிய கூட வளாகத்தில் இடம்பெற்றது.

ரி.பி. ஹன்ற் ஞாபகார்த்த ஓவிய கூடத்தின் ஸ்தாபகர் திருமதி யோகமணி அழகரத்தினம் தலைமையில் இடம் பெற்ற பரிசளிப்பு நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்குமார் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரனும் கௌரவ விருந்தினர்களாக சிவபூமி நிலையத் தலைவர் ஆறு திருமுருகன், அமெரிக்கன் சிலோன் தேவாலய தலைவர் தேவகுணானந்தன் அடிகளார், சாவகச்சேரிப் பொலிஸ் நிலைய உப பொலிஸ் பரிசோதகர் ஜெயரூபன், யாழ்ப்பாண பல் கலைக் கழக விரிவுரையாளர் மனோகர், விரிவுரையாளர் பிரசாந், வடமராட்சி வலயக் கல்வி அலுவலக அழகியல் பாட உதவிக்கல்விப் பணிப்பாளர் ஆரியதாஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.





# கிழக்கு மாகாணத்தில் 55 சிறுவர் இல்லங்கள்!

## சிறுவர் பராமரிப்பு திணைக்கள மாகாண ஆணையாளர் தகவல்





**(அபு அலா)**

கிழக்கு மாகாணத்திலுள்ள 51 சிறுவர் அபிவிருத்தி இல்லங்களில் ஆயிரத்து 204 பிள்ளைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். இதுதவிர அரச பாதுகாப்பு இல்லங்கள் நான்கில் 45 பிள்ளைகள் பராமரிக்கப்படுகின்றனர் என்று கிழக்கு மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக்கள மாகாண ஆணையாளர் திருமதி றிஸ்வானி றிபாஸ் தெரிவித்தார்.

உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு "எல்லாவற்றையும் விட பிள்ளைகள் பெறுமதியானவர்கள்" எனும் தொனிப் பொருளில் கிழக்கு மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட மாகாண மட்ட சிறுவர் தின நிகழ்வு நேற்று (05) திருகோணமலை ஹிந்து கலாச்சார மண்டபத்தில் இடம்பெற்றது.

அங்கு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் –

சிறுவர் அபிவிருத்தி இல்லங்களில் பராமரிக்கப்பட்டு வருகின்ற பிள்ளைகளில் மிகத் திறமையானவர்களும் இருக்கின்றனர். இந்த முறை வெளியான புலமைப் பரிசில் பரீட்சை, க.பொ.த சாதாரண தரம் மற்றும் க.பொ.த உயர் தரம் போன்ற பரீட்சைகளில் சித்தியடைந்துள்ளனர். அதில் புலமைப் பரிசில் பரீட்சையில் ஒருவரும், க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் 8 ஏ பெற்று 2 பேரும் சித்தியடைந்துள்ளனர். உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தது பல்கலைக் கழகத்துக்கு 22 மாணவர்கள் தெரிவாகியுள்ளனர் .

கல்வியில் மட்டுமல்ல விளையாட்டு, கலை, கலாசார மற்றும் மேடை நாடகம், பேச்சு, பாடல், இசை போன்ற பல்வேறுபட்ட திறன்கொண்டவர்களும் இருக்கின்றனர். அவ்வாறானவர்களை இன்றைய நிகழ்வில் பாராட்டி கௌரவிக்கவுள்ளோம்.– என்றார்.

இந்த நிகழ்வில், கிழக்கு மாகாண ஆளுநர் செயலக செயலாளர் எல்.பி.மதநாயக்க, கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே. முதளிதரன், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் அதிகாரிகள், கிழக்கு மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக்களத்தின் அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள், சி.டி. நிறுவனத்தின் பணிப்பாளர், சி.டி.எப். நிறுவனத்தின் பணிப்பாளர் மற்றும் லயன்ஸ் கழகத்தின் பிராந்திய தவிசாளர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வின்போது, சிறுவர்களுக்கான விழிப்புணர்வு, மேடை நாடகம், பேச்சு, பாடல், இசை போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

தேசிய மற்றும் மாகாண மாவட்ட ரீதியில் தெரிவு செய்யப்பட்ட முதல் நிலை பிள்ளைகள், மாவட்ட ரீதியில் இடம்பெற்ற மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் வெற்றி பெற்ற அணியினர், புலமைப் பரிசில் பரீட்சை மற்றும் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்கள், பல்கலைக் கழகத்துக்குத் தெரிவானோர் கௌரவிக்கப்பட்டனர்.







# முன்பள்ளியின் விளையாட்டு விழா

(சியாத்.எம்.இஸ்மாயில்)

அட்டாளைச்சேனை 'ஹவுஸ் ஒப் இங்லிஸ்' முன்பள்ளியின் வருடாந்த இல்ல விளையாட்டு விழா மற்றும் பரிசளிப்பு நிகழ்வுகள் முகாமையாளர் எஸ்.ஜெனீஸின் நெறிப்படுத்தலில் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் ஏ.ரீ.நக்கீல் தலைமையில் அட்டாளைச்சேனை அரசினர் ஆசியர் பயிற்சி கல்லூரி மைதானத்தில் நேற்று (05) நடைபெற்றது.

இந்த நிகழ்வில் அட்டாளைச்சேனை உதவிப் பிரதேச செயலர் எப்.நஹீஜா முசாபிர் மற்றும் அக்கரைப்பற்று கல்வி வலய உதவி கல்வி பணிப்பாளர் எஸ். அம்ஜத்ஹான், அட்டாளைச்சேனை கோட்டக் கல்வி அதிகாரி எம்.எச். எம். றஸ்மி, ஆசிரிய ஆலோசகர்களான ஏ.எல். பாயிஸ், எம்.எஸ்.எம்.பாஹிம், அம்பாறை மாவட்ட முன்பள்ளி பணியக உத்தியோகத்தர்களான எஸ்.எல். ஹபீல், ஐ.ஏ.றாசி உள்ளிட்ட பலர் அதிதிகளாக கலந்து கொண்டனர். போட்டிகளில் பங்குபற்றிய மாணவர்களுக்கு வெற்றிக் கிண்ணங்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.



# வடமராட்சி கரவெட்டியில் முக்கிய வீதியின் அவலம்!

வடமராட்சி கரவெட்டியில் முக்கியமான ஒரு வர்த்தக மையமாக வளர்ந்து வரும் நெல்லியடி நகருக்கு மிகவும் அருகாமையில் இருக்கும் சாமியன் அரசடி சந்தியில் இருந்து தெற்கு நோக்கி சோனப்பு மயான வெளிக்கு செல்லும் சுமார் ஒரு கிலோ மீற்றர் வீதி பல வருட காலமாகத் திருத்தியமைக்கப்படாது உள்ளது.

இதனால் மக்கள் பெரும் சிரமத்தை அனுபவிக்க வேண்டியுள்ளது.

இந்த வீதியில் இரு வைத்திய சாலைகள் இருக்கின்றன. இரு முக்கிய பாடசாலைகளுக்கும் உள்ளன. தச்சந்தோப்பு சிந்தாமணி விநாயகர் ஆலயத்துக்கும் இந்த வீதியூடாகவே செல்லவேண்டும்.

கோடை காலத்திலேயே மோசமான நிலையில் காணப்படும் இந்த வீதியால் மாரி காலத்தில் மக்கள் அறவே பயணம் செய்ய முடியாத நிலைமை உள்ளது. ஆங்காங்கே வெள்ள நீர் தேங்கிக் காணப்படுகிறது.

வீதியைச் செப்பனிடப்படுவதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போதும், அது நிறுத்தப்பட்டுள்ளது.



குண்டும் குழியுமாக காணப்படும் இந்த வீதிக்குச் சமாந்தரமாக இருக்கும் பல வீதிகள் செப்பனிடப்படுகின்ற போதிலும் இதை செப்பனிடுவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காது இருப்பது தொடர்பில் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கரவெட்டி, உடுப்பிட்டி தேர்தல் தொகுதியில் இருக்கும் இந்த வீதியைத் திருத்தியமைக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கேட்டுள்ளனர்.



# தேராவில் மாவீரர் துயிலும் இல்லத்தில் முன்னேற்பாட்டுப் பணிகள் தீவிரம்!

## இராணுவத்திடம் இருந்து காணியை விடுவிக்குமாறும் கோரிக்கை

தமிழ் மக்களுக்கான உரிமைப் போரில் தமது உயிர்களை ஈகம் செய்த மாவீரர்களை போற்றி வணங்கும் மாவீரர் நாள் இவ்வாண்டும் கார்த்திகை 27 ஆம் திகதி தமிழ் மக்களால் அனுஷ்ரிக்கப்படவுள்ளது.

மாவீரர் நாள் நிகழ்வுகளை மேற்கொள்வதற்கு தேராவில் மாவீரர் துயிலும் இல்லத்தில் முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாவீரர்களுக்கு ஈகைச்சுடர் ஏற்றி அகவணக்கம் செலுத்தி மலர்வணக்கம் இடம்பெற்றதை தொடர்ந்து சிரமதான பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

அத்தோடு மாவீரர் நாளை நினைவு கூறுவதற்கான உரிய இடவசதி இல்லாது தாம் துன்பப்படுவதாகவும் இந்தக் காணியை இராணுவத்திடம் இருந்து விடுவித்து உதவுமாறும் உறவுகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.











# ஜயவிமன செயற்றிட்டத்தின் கீழ் திருக்கோவிலில் வீடுகள் கையளிப்பு!

**(வி.ரி. சகாதேவராஜா)**

திருக்கோவில் பிரதேச செயலகத்தின் கீழ் சமுர்த்தி பயனாளிகளுக்கு ஜயவிமன செயற்றிட்டத்தின் கீழ் கட்டி முடிக்கப்பட்ட வீடுகள் உரிய பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன.

திருக்கோவில் பிரதேச சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எம். அரசரெட்ணம் தலைமையில் நேற்று நிகழ்வு இடம்பெற்றது.

இந்த வீடுகள் தம்பிலுவில் மேற்கு மற்றும் விநாயகபுரம் ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் பூரணபடுத்தப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன், சமுர்த்தி கருத்திட்ட முகாமையாளர் ஆர்.புண்ணியசீலன், தம்பிலுவில் சமுர்த்தி வங்கி முகாமையாளர் எஸ். சதிஸ் மற்றும் பயனாளர்களின் பிரிவுகளுக்குரிய கிராம சேவை உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.





# ஊடகத்துறைக்கான இளங்கலைஞர் விருது பெறும் ஊடகவியலாளர்!

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் வருடா வருடம் நடத்தப்பட்டுவரும் கிழக்கு மாகாண இலக்கிய விழாவின் 2023 ஆண்டுக்கான விருது வழங்குவதற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளவர்களில் ஊடகத்துறைக்கான இளங்கலைஞர் விருதுக்கு மட்டக்களப்பு களுதாவளையைச் சேர்ந்த ஊடகவியலாளர் வடிவேல் சக்திவேல் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கிழக்கு மாகாண இலக்கிய விழா 2023 ஆண்டுக்கான தெரிவு முடிவுகளை கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வெளியிட்டுள்ளது.



அதிலேயே இளங்கலைஞர் விருதுக்கு ஊடகவியலாளர் வடிவேல் சக்திவேல் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஊடகவியயலாளர் சக்திவேல் சுமார் 18 வருடங்களுக்கு மேலாக ஊடகத்துறையில் சுயாதீன ஊடகவியலாளராக செயற்பட்டு வருகின்றார். அவர் கிழக்கு மாகாணத்தின் பல கிராமப்புறங்களுக்கும் நேரில் சென்று மக்களின் பிரச்சினைகளை செய்திகளாகவும், கட்டுரைகளாகவும், ஆவணப்படுத்தல் தொகுப்புக்கள் ஊடாகவும் வெளிக்கொணர்ந்துள்ளார்.

இந்த நிலையில் அவர் 2008 இல் சிறந்த மக்கள் சேவை ஊடக விருது, 2018 இல் சிறந்த கட்டுரையாளருக்கான விருது, 2022 இல் சுப்பிரமணியம் செட்டியார் விருது உள்ளிட்ட தேசியான விருதுகளையும் மற்று கிராமிய, பிரதேச மட்டங்களில் பல விருதுகளையும் பெற்றுள்ளார்.


வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 01 - 30, 2023
"ஒரு தேசமாக நிலைத்திருக்க, ஒரு மாநிலமாக வளர, மக்களாக வாழ எங்களிடம் மரங்கள் இருக்க வேண்டும்."
தியோடர் ரூஸ்வெல்ற் - அமெரிக்காவின் 26ஆவது ஜனாதிபதி
ஆளுக்கொரு மரம் நடுவோம்
நாளுக்கொரு வரம் பெறுவோம்
கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!
தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்


AIRPORT PIKUP & DROPING
COLOMBO - JAFFNA
WEDDING SERVICE
DAY RENTING
KDH
BEST FOR
VAN RENT
Make Your Ride Better
CALL NOW
+94 773 776 882



# அடுத்த தலைமுறையினரை இணைத்து கட்சிச் செயற்பாட்டை முன்னெடுக்க வேண்டும்

## முஸ்லிம் காங்கிரஸ் பிரதி தேசிய அமைப்பாளர் உதுமாலெப்பை தெரிவிப்பு

(கே. எ. ஹமீட் )

கட்சிச் செயற்பாடுகளை முன்னெடுக்கும் போது அடுத்த தலைமுறையினரை இணைத்துச் செயற்பட வேண்டும்.

இவ்வாறு கிழக்கு மாகாண முன்னாள் வீதி அபிவிருத்தி அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதி தேசிய அமைப்பாளருமான எம்.எஸ். உதுமாலெப்பை தெரிவித்தார்.

நாவிதன்வெளி பிரதேச முஸ்லிம் காங்கிரஸ் அமைப்பாளர் ஏ.சி.ஏ. நிஷார் தலைமையில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் கிளைகள் புனரமைப்புக் கூட்டம் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றும் போது தெரிவித்துள்ளவை வருமாறு-

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை மறைந்த பெருந் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஸ்றப் உருவாக்குவதற்கு பெரும் தியாகம் செய்தார்.

அன்று தலைவர் அஸ்றப்பின் கொள்கைக்கு பின்னால் மூத்தவர்களும், இளைய தலைமுறையினர்களும் அர்ப்பணிப்போடு ஒற்றுமையாகச் செயற்பட்டனர்.

அன்று ஆட்சியில் இருந்த ஐக்கிய தேசிய கட்சி, எப்படியும் தலைவர் அஸ்ரப்பும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும் வளர்ந்து விடக் கூடாது என்பதற்காக உச்ச அரசியல் அதிகாரத்தை பாவித்து தடைகளை விதித்தது.

அத்தனை தடைகளையும் தாண்டியே மக்கள் தலைவர் அஸ்ரப்பின் கொள்கைக்கு பின்னால் ஒற்றுமைப்பட்டனர். இந்த வரலாற்றை இன்று 25 வயது அடைந்துள்ள எமது இளைஞர்களுக்கு அறிந்து கொள்வதற்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை.

எனவே நமது கட்சியின் செயற் பாடுகளில் நமது அடுத்த தலைமுறையினரையும் இணைத்து பயணிக்க வேண்டிய கால கட்டத்தில் நாம் உள்ளோம்.

கிராம மட்டத்தில் கட்சிச் செயற்பாட்டாளர்கள் செயற்படும் போது முக்கியமான தீர்மானங்கள் தொடர்பாக கலந்துரையாடப்படவில்லை. எதிர் காலத்தில் நிறைவு செய்யக் கூடிய வகையில் கட்சி கிளைகள் புணரமைக்கப்பட்ட பின் கட்சி செயற்பாட்டாளர்கள் ஒன்றிணைந்து கட்சி கட்டமைப்புடன் கலந்துரையாடி தீர்மானங்களை மேற்கொள்ளக் கூடிய நிலமை ஏற்படும்.

எல்லோரும் ஒற்றுமையாக செயற்படுவதன் ஊடாகவே கட்சியின் வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்யலாம் .- என்றார்.

இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் குழுவின் செயலாளர் ஏ.சி. சமால்தீன், நாவிதன் வெளி பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.பி. நவாஸ் மற்றும் கட்சியின் முக்கியஸ்த்தர்கள் கலந்து கொண்டனர்.





# இளையோருக்குச் செயலமர்வு!

(பழுவூரான்)

மட்டக்களப்பு மறை மாவட்ட கத்தோலிக்க இளைஞர் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இளைஞர், யுவதிகளுக்கு செயன் முறையிலான ஆங்கிலம் இலகுபடுத்தல் மற்றும் காலநிலை மாற்றங்கள் தொடர்பில் தெளிவுபடுத்தும் வகையிலான செயலமர்வு நேற்று ஞாயிற்றுக் கிழமை (05) மட்டக்களப்பு சாள்ஸ் மண்டபத்தில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மறை மாவட்ட கத்தோலிக்க இளையோர் சம்மேளன இயக்குனர் அருட்பணி டெரன்ஸ் றாகல் தலைமையில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில் ஆங்கில அடிப்படையிலான செயல் முறை மூலமான கருத்தரங்கை வளவாளராக ஒக்ஸ்பேட் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் ஜொசுவா ஜெரிசாந்தும், காலநிலை மாற்றம் தொடர்பான செயலமர்வை மட்டக்களப்பு மறை மாவட்ட கிறிஸ்தவ வாழ்வு சமூகத்தினரும் வழங்கினர்.

இந்தச் செயலமர்வில் மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 42 இளைஞர், யுவதிகள் கலந்து கொண்டனர்.



# இலங்கையில் மலையகத் தமிழர் விழாவில் முதல்வர் ஸ்டாலினின் காணொலிக்கு தடை

## - மத்திய அரசுக்கு வைகோ கடும் கண்டனம்

இலங்கையில் மலையகத் தமிழர் விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலிக்கு தடை விதிக்கப்பட்டதை யடுத்து மத்திய அரசுக்கு, ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ இது தொடர்பாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தென் தமிழகத்தில் இருந்த அப்பாவி மக்கள் வலு கட்டாயமாக இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டனர். அவர்கள் இலங்கை மலையகத் தமிழர்கள் என்ற பெயரில் அடையாளப்படுத்தப்பட்டார்கள். இலங்கையில் குடியமர்த்தப்பட்ட மலையகத் தமிழர்கள் புலம்பெயர்ந்த 200 ஆவது ஆண்டு தற்போது அனுஷ்டிக்கப்படுகிறது. 'நாம் 200 ஒற்றுமை பன்முகத்தன்மை மற்றும் பாரம்பரியத்தின் முழக்கம்' என்ற பெயரில் மூன்று நாட்கள் நிகழ்ச்சிகள் நடந்தது.

இலங்கையில் உள்ள மலையக தமிழர்களின் உறவு பாலமாக அமைச்சர் ஜீவன் தொண்டமான் முன்னெடுத்த, இந்த நிகழ்ச்சியில் மலையக தமிழர்கள் அவர்களின் பூர்வீக தமிழ் பூமி சார்ந்த அரசியல் பிரதிநிதிகளாக தமிழ்நாட்டிலிருந்தும் கலந்து கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டது. இதில் தமிழகத்தை பூர்வீகமாக கொண்ட இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் கலந்து கொண்டார். இலங்கை அரசின் பங்களிப்புடன் இலங்கை அமைச்சர் ஜீவன் தொண்டமான் அவர்களால்



ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் காணொலி வாயிலாக கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்க வேண்டும் என ஜீவன் தொண்டமான் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

அதனை ஏற்று தமிழ்நாடு முதல்வர் ஸ்டாலின் காணொலி வாயிலாக மலையகத் தமிழர்களின் 'நாம் 200' விழாவிற்கு வாழ்த்துரை வழங்கி அனுப்பியிருந்தார். அந்த உரையில், இலங்கை நாட்டுக்காக தங்களது உழைப்பை வழங்கியவர்கள் மலையகத் தமிழர்கள். இலங்கை நாடு உயர உழைத்தவர்கள். தங்களது ரத்தத்தையும் வியர்வையையும் காலத்தையும் கடமையையும் அந்த நாட்டுக்காகவே ஒப்படைத்தவர்கள்.

அந்த வகையில், மலையக தமிழ் மக்களின் நீதியும் உரிமையும் நிலை நாட்டப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மலையக தமிழர்களின் குழந்தைகளின் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். இலங்கையில் வாழும் அனைத்து மக்களையும் போல கல்வியிலும் பொருளாதார முன்னேற்றத்திலும் அவர்கள் மேலெழும்பும் காலத்தை எதிர்நோக்கி தமிழ்நாடு காத்திருக்கிறது. கல்வி, சுகாதாரம், வாழிட உரிமைகள், பொருளாதார உதவிகள், சமூக உரிமைகள் அனைத்தும் வழங்கப்பட வேண்டும். நாட்டை வாழ வைத்த மக்களை வாழ வைக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும். அதற்காக தொப்புள் கொடி உறவுகளான தமிழ்நாடு என்றும் குரல் கொடுக்கும் என்று முதல்வர் ஸ்டாலின் உரையில் குறிப்பிட்டிருந்தார்.

முதல்வரின் உரை ஊடகங்கள் மற்றும் ஏடுகளுக்கும் அளிக்கப்பட்டிருந்தன. ஆனால் நவம்பர் 3 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற இந்த விழாவில் தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலினின் காணொலி உரையை ஒளிபரப்ப கூடாது என்று மத்திய பாஜக அரசு தடை போட்டு விட்டது என இந்து ஆங்கில நாளேடு விரிவாக செய்தி வெளியிட்டு இருக்கிறது.

இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க மற்றும் பிரதமர் உள்ளிட்டோர் கலந்து கொண்ட அந்த நிகழ்ச்சியில் இந்திய அரசின் சார்பில் ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் கலந்து கொண்டார். தமிழ்நாடு பா.ஜ.க. தலைவரும் பங்கேற்க ஏற்பாடு செய்யப்பட்டது.

ஆனால் தொப்புள் கொடி உறவுகளான தமிழ்நாட்டு மக்களின் சார்பில் வாழ்த்துரை வழங்கி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அனுப்பிய காணொலி உரையை அந்த விழாவில் ஒளிபரப்ப தடை விதித்ததன் மூலம் முதல்வர் ஸ்டாலினை சிறுமைப்படுத்துவதற்கு முயன்றுள்ள மத்திய பா.ஜ.க. அரசின் செயல் ஏற்றுக்கொள்ள முடியாதது கடும் கண்டனத்துக்குரியது என்று தெரிவித்துள்ளார்.

# சனாதன ஒழிப்பு குறித்து பேசிய அமைச்சர்கள் மீது பொலிஸார் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும்!

## - உயர் நீதிமன்றம் தெரிவிப்பு

சனாதன தர்மம் ஒழிப்பு மாநாட்டில் கலந்து கொண்ட தமிழக அமைச்சர்கள் மீது நடவடிக்கை எடுக்காத பொலிஸார், தமது கடமையை செய்யத் தவறி குற்றம் புரிந்துள்ளனர் என்று சென்னை உயர் நீதிமன்றம் அதிருப்தி தெரிவித்துள்ளது.

திராவிட கருத்தியலுக்கு எதிராக 'திராவிட ஒழிப்பு மாநாடு' என்ற பெயரில் கடந்த ஒகஸ்ட் மாதம் உள்ளரங்கு கூட்டம் நடத்த திட்டமிட்டு, அதற்கு அனுமதி கோரிய தமிழர் சமுதாய கூட்டமைப்பின் விண்ணப்பத்தை பூந்தமல்லி பொலிஸார் நிரகரித்தனர்.

இதனை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம், சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்படும் என்ற அச்சத்துக்காக மட்டும் கருத்து சுதந்திரத்தை தடுக்க முடியாது எனக் கூறி, மனுதாரர் அளிக்கும் புதிய விண்ணப்பத்தின் மீது அனுமதி வழங்கும்படி பொலிஸாருக்கு உத்தர விட்டது. மேலும், யாரும் சட்டம் ஒழுங்கு பிரச்சினையை உருவாக்கக்கூடிய சூழலை ஏற்படுத்தக் கூடாது என்றும் அறிவுறுத்தி இருந்தது.

இந்த உத்தரவின் அடிப்படையிலும், சனாதன ஒழிப்பு மாநாடு நடத்தப்பட்டதன் அடிப்படையிலும், திராவிட கொள்கைகளுக்கு எதிராக கூட்டம் நடத்த அனுமதி கேட்டு திருவேற்காட்டை சேர்ந்த மகேஷ் கார்த்திகேயன் என்பவர் மாதவரம் பொலிஸ் நிலையத்தில் மனு அளித்தார்.

இந்த மனுவை பொலிஸார் பரிசீலிக்கவில்லை எனக்கூறி அவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கு நீதிபதி ஜெயசந்திரன் முன்பு இன்று விசாரணைக்கு வந்தது. இதன்போது சனாதன ஒழிப்பு குறித்து பேசிய அமைச்சர்கள் மீது பொலிஸார் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். அரசியலமைப்பின் உணர்வைப் பாதுகாப்பதற்காக பதவிப் பிரமாணம் செய்து கொண்டவர்கள், அவர்கள் உறுதிமொழியை மீறி செயல்படுவதால், அவர்களுக்கு ஆதரவாகச் செயல்படும் சில குழுக்கள் மீது பொதுமக்களின் அதிருப்தி இருக்கும். இந்த கூட்டத்துக்கு அனுமதி அளிப்பது பொதுமக்களிடையே நிலவும் அமைதிக்கு இடையூறு ஏற்படுத்துவதாக அமைந்துவிடும். எனவே, கூட்டத்துக்கு அனுமதி அளிப்பதன் மூலம் நீதிமன்றமும் தவறிழைக்க முடியாது எனக்கூறி, மனுவை தள்ளுபடி செய்து நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

# இன்னும் 48 மணித்தியாலத்துக்குள் காசாவுக்குள் நுழைந்துவிடுவோம்!

## - இஸ்ரேல் இராணுவம் அறிவிப்பு

இஸ்ரேல் – ஹமாஸ் போர் நாளுக்குநாள் தீவிரமடைந்து வருகிறது. காசாவில் இஸ்ரேலியப் படைகள் இடைவிடாது தாக்குதல் நடத்துவதால் அங்கு மீண்டும் தொலைத்தொடர்பு சேவைகள் துண்டிக்கப்பட்டுள்ளன. ஒரே மாதத்தில் 3 ஆவது முறையாக இவ்வாறு தொலைத்தொடர்பு அங்கு முடக்கப்பட்டுள்ளது. நேற்று காசாவில் அகதிகள் முகாம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 40 பேர் கொல்லப்பட்டனர்.

இதற்கிடையில் இஸ்ரேல் இராணுவ செய்தித் தொடர்பாளர் டேனியல் ஹகாரி செய்தியாளர்களை சந்தித்தபோது, காசாவில் வடக்கு, தெற்கு எல்லாம் இப்போது இல்லை. மொத்த காசாவும் இரண்டாகப் பிரிந்துள்ளது. நாங்கள் காசாவை சூழ்ந்துவிட்டோம். இன்னும் 48 மணி நேரம் தான் காசா நகருக்குள் இஸ்ரேலியப் படைகள் நுழைந்துவிடும் என்று எச்சரித்துள்ளார்.

ஹமாஸ் – இஸ்ரேல் மோதலில் இதுவரை 9 ஆயிரத்து 700 இற்கும் மேற்பட்ட பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களில் 4000 இற்கும் மேற்பட்டோர் குழந்தைகள். இஸ்ரேலில் 1400 பேர் பலியாகியுள்ளனர். 242 பேர் ஹமாஸ் படையினரால் பிணைக் கைதிகளாகப் பிடித்துச் செல்லப்பட்டனர்.

முன்னதாக நேற்று அமெரிக்காவின் வெளிவிவகார அமைச்சர் அண்டனி பிளிங்கன் இஸ்ரேல் ஆக்கிரமிப்பு



மேற்கு கரைப்பகுதிக்கு திடீர் விஜயம் செய்தார். பின்னர் அவர் பாலஸ்தீன ஜனாதிபதி மஹமூத் அப்பாஸை சந்தித்தார். காசா மக்கள் கட்டாயமாக வெளியேற்றப்படக்கூடாது என்று அமெரிக்க அமைச்சர் பிளிங்கன் வலியுறுத்தினார். இருவரும் பாலஸ்தீனர்கள் மீதான வன்முறைகள் குறித்து விவாதித்தனர் என வெள்ளை மாளிகை தெரிவித்தது.

இதேவேளை, போர் தீவிரமடைந்து வரும் சூழலில் ஹமாஸ் படையினரால் பணயக் கைதியாக பிடித்துச் செல்லப்பட்ட தனது மகள் கொல்லப்பட்டதையடுத்து இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தனது பதவியை ரானினாமா செய்ய வேண்டும் என்று அந்த நாட்டைச் சேர்ந்த முக்கிய தொழில் முனைவோர் இயான் வால்ட்மேன் வலியுறுத்தியுள்ளார். இவர் தொழில்நுட்ப நிறுவனம் வைத்துள்ளார்.

இஸ்ரேலிய நிறுவனம் ஒன்றில் முதன்முறையாக பாலஸ்தீனரைப் பணியமர்த்தியதற்காக அவர் அறியப்பட்டார். இந்த நிலையில் கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி ஹமாஸ் தாக்குதலில் இவரின் மகள் கடத்தப்பட்டார்.

ஹமாஸ் தீவிரவாதிகள் தாக்குதலைக் கட்டுப்படுத்தத் தவறியதால் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு பதவியை ராஜினாமா செய்ய வேண்டும் என்று இயான் வால்ட்மேன் வலியுறுத்தியுள்ளார். தன் மகள் உயிர் பறிபோனதற்கு பிரதமரே பொறுப்பேற்க வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, காசா மீதான இஸ்ரேல் தாக்குதலில் இதுவரை 88 ஐ.நா. ஊழியர்கள் உயிரிழந்துள்ளனர் என ஐ.நா. இன்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் அனைவரும் பாலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா. முகமையைச் சேர்ந்தவர்களாவர். ஒரே போரில் இத்தனை ஐ.நா. ஊழியர்கள் உயிரிழந்திருப்பது வேதனை என்று ஐ.நா. தெரிவித்துள்ளது. மேலும், தற்போதைய சூழலில் மனிதாபிமான அடிப்படையில் காசாவில் உடனடியாக போர் நிறுத்தம் கொண்டுவரப்பட வேண்டும் என்றும் ஐ.நா. வலியுறுத்தியுள்ளது.

# பொரிஸ் ஜோன்சன், ஸ்கொட் மொரிசன் ஆகியோர் இஸ்ரேலுக்கு கூட்டுப் பயணம்

பிரித்தானியாவின் முன்னாள் பிரதமர் பொரிஸ் ஜோன்சன், அவுஸ்ரேலியாவின் முன்னாள் பிரதமர் ஸ்கொட் மொரிசனுடன் இஸ்ரேலுக்கு கூட்டுப் பயணமொன்றை மேற்கொண்டுள்ளார்.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி முதல் ஹமாஸ் நடத்திய தாக்குதலுக்குப் பிறகு, தமது ஆதரவை வெளிப்படுத்துவதற்காக அவர்கள் இந்த விஜயத்தை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த விஜயத்தின போது, எதிர்க் கட்சித் தலைவர் யாயிர் லிப்பிட்டை சந்தித்து, அவர்கள் தமது ஆதரவை தெரிவித்துள்ளனர்.

குறித்த இருவரும் தாக்குதலுக்கு இலக்கான கிப்புட்ஸ் கஃபர் ஆசா பகுதியையும் பார்வையிட்டுள்ளனர்.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி



முதல் இஸ்ரேலில் ஆயிரத்து 400 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன், 200 க்கும் மேற்பட்டோர் ஹமாஸ் படையினரால் பணயக் கைதிகளாக சிறைப்பிடிக்கப்பட்டுள்ளனர்.

இது இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு யூத மக்கள் மீதான மிகவும் மோசமான தாக்குதல் என பிரித்தானிய முன்னாள் பிரதமர் பொரிஸ் ஜோன்சன் குறிப்பிட்டுள்ளார்.